

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் பி. கே.சேகர் பாபு வழி காட்டுதலின் பேரில் திருவிக நகர் வடக்கு பகுதி 71வட்ட தகவல் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ரேவதி ஏற்பாட்டில் திருவிக நகர் பகுதி செயலாளர் செ.தமிழ் வேந்தன் முத்தமிழ் அறிஞர் படத்துக்கு மலர் மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் மரக்கன்று வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்வில் புனிதவதி எத்திராசன், தில்லை கதிரவன், புல்லட் கி.ரமேஷ், பரிமளா சுரேஷ், ஜெ.அண்ணாதுரை, ஸ்வீட்பாபு, வி.ஜெகன், ஜல பூஷணம் பாண்டுரங்கன், எஸ்.கே.சிவகுமார், வி.பாலாஜி, து.பிரகாசம், ரெட் லிங்கேசன், ஜமுனா குணசேகரன், வினோத், ராமமூர்த்தி, சுரேஷ், பிரேம் குமார், நீலகண்டன், து. குமார், விவேக், முத்தம்மாள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் நகர திமுக சார்பில் திருநின்றவூர் நகரம் முழுவதும் மாவட்ட செயலாளர் ஆவடி சாமு நாசர் ஆலோசனைப் படி நகர கழக செயலாளர் தி. வை.இரவி கழக கொடியேற்றி முத்தமிழறிஞர் கலைஞரின் படத்திற்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு பிரியாணி அன்னதானங்கள் வழங்கினார். உடன் இதில் உஷாராணி ரவி, ஜெ.அன்பழகன், சி.கமலக் கண்ணன், தெ.நாகராஜி, ஆர்.ரவி, ச.பாபு, தெய்வசிகாமணி , சலீம், கோட்டீஸ்வரன், அசோக்குமார், தங்கராஜ், ஏகாம்பரம், மோகன கிருஷ்ணன், பால்ராஜ், சுரேஷ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

“இது மக்கள் ஆட்சியா,, இல்லை ரீல்ஸ் ஓட்டும் ஆட்சியா?” தேர்தல் வாக்குறுதிகளை மறந்த த,வெ,க, முதலமைச்சரே !

# வசனம் பேசுவதை விடுத்து மின்வெட்டு, சட்டம் ஒழுங்கைச் சரி செய்யுங்கள்!

## கோவையில் – வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கோவை, ஜூன் 7-

இது மக்கள் ஆட்சியா.. இல்லை ரீல்ஸ் ஓட்டும் ஆட்சியா?” தேர்தல் வாக்குறுதிகளை மறந்த த.வெ.க. வசனம் பேசுவதை விடுத்து மின்வெட்டு, சட்டம் ஒழுங்கைச் சரி செய்யுங்கள் என்று செய்தியாளர்கள் சந்திப்பில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கூறினார்.



செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி வருமாறு:-

**கேள்வி:** முதலமைச்சர் பேசும் போது தி.மு.க. மீது தான் குற்றச்சாட்டு வச்சு தொடர்ந்து விமர்சித்து வருவது பற்றி!

**பதில்:** திரையில் வசனங்கள் பேசலாம். திரைத்துறையில் வசனங்கள் பேசலாம். திரைப்படங்களில் வசனங்கள் பேசலாம். ஒரு அரசு பொறுப்பேற்று முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்திற்குள் என்ன அவசர தேவைகள் இருக்கிறது? என்ன அத்தியா வசிய தேவைகள் இருக்கிறது என்பதை உணர்ந்து செய்ய வேண்டியது இந்த அரசினுடைய கடமை. எங்களுடைய கழகத் தலைவர் 2021ம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்கின்ற பொழுது கொரோனா காலம் மிக மோசமான ஒரு சூழலில் இருந்த அந்த நிலையில் வெற்றி பெற்றவுடன் அரசு பொறுப்பேற்பதற்கு முன்பாகவே அரசு அதிகாரிகளை அழைத்து, அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அவர்களோடு கலந்து ஆலோசித்து பல்வேறு சீரிய நடவடிக்கைகளை எடுத்ததன் மூலமாக அன்னைக்கு தமிழ்நாடு மக்கள் காப்பாற்றப்பட்டார்கள். இன்று பொறுப்பேற்றிருக்கக்கூடிய அரசு தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றச்சாட்டு களை வைப்பதில் மட்டுமே குறியாக இருக்கின்றார்களே தவிர மக்களுக்கு சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தவில்லை. அந்தந்த துறையினுடைய அமைச்சர்கள் துறையினுடைய ஆய்வுக் கூட்டங்களை நடத்தி அந்த துறையை எப்படி எடுத்துச் செல்லலாம் என்பதில் கவனம் செலுத்தவில்லை. அதற்கு மாறாக முதலமைச்சர் உட்பட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றச்சாட்டு களை சுமத்துவதில் மட்டுமே குறியாக இருந்து கொண்டிருக்கின்றார்கள். திராவிட மாடல் அரசு எங்களுடைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க திட்டங்கள் மக்கள் இன்றும் நினைவில் வைத்திருக்கின்றார்கள். இன்றும் அதை நினைவில் வைத்து எங்களுடைய கழகத் தலைவருக்கு தொடர்ந்து ஆதரவை வழங்குவதற்கு மக்கள் தயாராகத்தான் இருக்கின்றார்கள். இந்த புதிய அரசை பொறுத்தவரைக்கும் குறைகளை சொல்வதை விட்டுவிட்டு மக்களிடத்தில் செய்ய வேண்டிய திட்டங்களை முன்னெடுப்பது அவர்களுக்கு இந்த நேரத்தில் அவர்கள் செய்ய வேண்டிய அந்த பணிகளை மறந்து வசனங்களை பேசிக் கொண்டிருக்கின்றார்கள். திருச்சியில் கூட பொதுக்கூட்டங்கள் நன்றி அறிவிப்பு கூட்டம் என்று சொல்லிட்டு தி.மு.கவை குறை சொல்றதுதான் குறியா வச்சிருக்காங்க தவிர செய்ய வேண்டிய நடவடிக்கைகளை, அவங்க எடுக்க வேண்டிய முன்னெடுப்பு களை செய்யறதுக்கு அவங்க ஒன்னும் செய்யல. இதற்கு எங்களுடைய துணை பொதுச் செயலாளர் ராஜா எம்.பி., மிகத் தெளிவான ஒரு புள்ளி விவரத்தை கொடுத்திருந்தாங்க. இந்த அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டார்கள். அரசு தவறு செய்கின்ற பொழுது அதனை சுட்டிக்காட்டுவது எதிர்க் கட்சிகளின் கடமை அதை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்.

**கேள்வி:** கோவை மாவட்டத்திற்கு தற்போது இரண்டு அமைச்சர்கள் இருப்பது பற்றி!

**பதில்:** முதலில் அவர்கள் என்ன திட்டங்களை முன்னெடுக்கிறார்கள், என்ன கொள்கைகளில் உள்ளார்கள் என்று பார்க்க வேண்டும், மாற்றம் என்று கூறி மக்களை ஏமாற்றி வெற்று கவர்ச்சியில் மக்களிடம் ஓட்டுகளை வாங்கியுள்ளார்கள் என்றும் மாற்றம் என்றால் என்னவென்று முதலில் அவர்கள் கூற வேண்டும்.

கல்வி, மருத்துவம், தொழில் துறை ஆகியவற்றில் மாற்றம் என்று அவர்கள் கூறுகிறார்கள் கல்வி மற்றும் மருத்துவத்தில் தமிழ்நாடு ஏற்கனவே முதலிடத்தில் தான் உள்ளது.

**கேள்வி:** மகளிர் பாதுகாப்பு படையை அமைப்பேன் என்று முதல்வர் கூறிய நிலையில் மூன்று முறை அதை தள்ளி போட்டு உள்ளார்கள் - இது பற்றி

**பதில்:** சூலூர் சம்பவம் அனைவருக்கும் தெரியும் இவ்வாறான சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆறு மாத காலம் பொறுத்திருக்க வேண்டுமா?

எங்கள் கழக தலைவர் ஆட்சியில் மின்வெட்டு இல்லாத ஆட்சியாக இருந்தது, ஆனால் தற்பொழுது மின்வெட்டு காரணமாக பல்வேறு இடங்களில் மக்கள் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. இவ்வாறான சூழலில் மின்சாரத்துறை அமைச்சர் உடனடியாக இதுகுறித்து அதிகாரிகளுடன் ஆய்வு கூட்டங்களை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். விளையாட்டுத்துறை அமைச்சர் எங்கள் கழகத் தலைவர் துவக்கி வைத்ததை ஏதோ புதிதாக துவக்கியதை போல அறிவிக்கிறார். என்றும் நாங்கள் பொறுப்பேற்கும் பொழுதே மின்சாரத் துறையில் ரூ 1.5 லட்சம் கோடி கடன் இருந்தது வருடத்திற்கு 15,000 கோடி வட்டி கட்ட வேண்டி இருந்தது என்றும் வசனங்களையும், கருத்துக்களையும் பேசுவதை விட்டு விட்டு துறையையும், அரசையும் நல்ல முறையில் எடுத்துச் செல்ல வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், மேலும் போதைப் பொருட்கள் என்னென்ன மாநிலங்கள் வழியாக வந்தது அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று எங்களுடைய முதல்வர் விளக்கம் அளித்திருந்தார் ஆனால் தற்பொழுது உள்ள அரசு என்னென்ன முயற்சிகளை முன்னெடுத்துள்ளது என்பதை கூற வேண்டும்.

த.வெ.க. எவ்வளவு கீழ்த்தரமாக பேச முடியுமோ அவ்வளவு கீழ்த்தரமாக பேசுகிறார்கள், தேர்தலுக்கு முன்பு டாஸ்மாக் விஷயத்தில் அவர்களது நிகழ்ச்சிகளில் மோசமாக பாட்டு பாடினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும் ஆனால் தற்பொழுது டாஸ்மாக் விவகாரத்தில் எவற்றை கட்டுப்படுத்தி விட்டார்கள்? என்றும் கேள்வி எழுப்பினார். தேர்தலுக்கு முன்பு வண்டி மீது ஏறி நின்று பொய்யான கருத்துக்களை கூறி அவதூறு பரப்பி பாட்டு எல்லாம் பாடினார்கள் ஆனால் டாஸ்மாக் விவகாரத்தில் தற்பொழுது வரை அந்த துறையின் அமைச்சர் விளக்கத்தை மட்டுமே கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்றும் அப்படி என்றால் அன்று பாடிய பாட்டுக்கு என்ன பதில் என்று கேள்வி எழுப்பினார்.

யோசிக்காமல் வாக்குறுதிகளை கொடுத்துள்ளார்கள் அதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளையாவது எடுத்திருக்க வேண்டும் என்றும் என்னை பொருத்தவரை தவெக என்பது ரீல்ஸ் ஆட்சி இன்னும் அவர்கள் ரீல்ஸ் மோகத்தில் தான் உள்ளார்கள் அமைச்சர்களும், அரசும் ரீல்ஸ் மோகத்தில் தான் உள்ளது மக்களுக்கான ரியல் ஆட்சியாக இன்னும் அவர்கள் பணிகளை துவக்க வில்லை அவர்கள் பணியை துவக்குவார்கள் என்ற நம்பிக்கையும் மக்களிடத்தில் இல்லை என்று தெரிவித்தார்.

அண்ணாமலை புதிதாக கட்சி துவங்குவதாக தகவல்கள் வெளியாவது தொடர்பான கேள்விக்கு அது போன்ற ஒரு தகவல் எனக்குத் தெரியவில்லை அவர் அவ்வாறு ஆரம்பித்தால் அதை பற்றி பேசலாம் என்று தெரிவித்தார்.

மேலும் தொழில்துறை அமைச்சர் ரீல்ஸ் மூலம் எவ்வளவு முதலீடுகளை ஈர்க்கிறார்? எவ்வளவு ஒப்பந்தங்கள் கையெழுத்து ஆகிறது? எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட போகிறது? எத்தனை கோடி தமிழ்நாட்டில் முதலீடு செய்யப் போகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்க்கலாம், பல்வேறு அமைச்சர்கள் கூறுவதைப் போலவே ஒரு மாத காலம் காத்திருந்து பார்ப்போம் தொழிலாளர்களின் பிரச்சினைகளை எல்லாம் சரி செய்து விடுவார்களா என்று பொறுத்திருந்து பார்க்கலாம் என்று தெரிவித்தார்

இந்த நிகழ்வில், கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், மாநகராட்சி மேயர் கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், பகுதி கழக செயலாளர் பசுபதி, பொதுக்குழு உறுப்பினர் மு.ம.ச.முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் 103வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடக்கு திட்டம் நாப்பாளையம் பிரிவு, 110 கே.வி.துனை மின் நிலையம் பிரிவு மணலி ஆகிய இடங்களில் பேரவை கொடியேற்றி தலைவர் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து சென்னை வடக்கு திட்டம் சார்பில் தண்டையார்பேட்டை கோட்டம் மணலி புதுநகர் வினாயகர் முதியோர் அன்பு இல்லத்தில் உள்ள முதியோர் அனைவருக்கும் அறுசுவை உணவு தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் மாநில முன்னாள் தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் வழங்கினார். உடன் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் பொருளாளர் டி.அருள், ஏ.ராஜேந்திரன், சி.சிவப்பிரகாசம் ஆர்.சங்கர், வேதமணி, எம்.இளங்கோவன், கணபதி, நாம் பாளையம் கிளை ரவி,முத்து, ஜெயசந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை முட்டுக்காட்டில் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான NIEPMD நிறுவனத்தில்

# ஆட்குறைப்பு நடவடிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்!

## கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என். தீபக் அறிக்கை!

சென்னை, ஜூன் 7-

சென்னை முட்டுக்காட்டில் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான NIEPMD நிறுவனத்தில் ஆட்குறைப்பு நடவடிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என்.தீபக் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 2005-ஆம் ஆண்டில், தலைவர் கலைஞர் அவர்களின் பெரும் முயற்சியில் கொண்டு வரப்பட்ட நிறுவனம், ஒன்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் தேசிய மேம்பாட்டு நிறுவனம் (NIEPMD) ஆகும். மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகிறது.

தேசிய நிறுவனமான NIEPMD கிழக்குக் கடற்கரைச் சாலை, முட்டுக்காடு, கோவளத்தில் அமைந்துள்ளது. இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு இந்த நிறுவனம் பல ஆண்டுகளாக மதிப்புமிக்க சேவைகளை வழங்கி வருகிறது.

ஒரு மனிதனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஊனங்கள் அமையப்பெற்று சிரமப்படுபவர்களுக்கும், பல்வகை ஊனம் கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் மதிநுட்பமிக்க மற்றும் நுண்ணிய அறிவியல் முறை சிகிச்சைகளை மேற்கொண்டு வரும் நிறுவனமாக NIEPMD இருப்பது குறிப்பிடத் தகுந்ததாகும். 2024-25 ஆண்டு செயல் அறிக்கையின் படி புதிய பயனாளர்கள்: 4565 நபர்களும்; தொடர் பயனாளர்கள்: 52342 நபர்களும் பயன் பெற்று வந்துள்ளனர். பின்வரும் துறைகள் மற்றும் பிரிவுகள் இதில் செயல்பட்டு வருகிறது.

1.மருத்துவ அறிவியல் துறை

a)செயற்கை அவயங்கள் மற்றும் உபகரணங்கள் துறை.

b)இயன் முறை சிகிச்சை.

c)தொழில்சார் சிகிச்சை.

2.மருத்துவ உளவியல் துறை.

3.பேச்சு, செவிப்புலன் மற்றும் தகவல் தொடர்புத் துறை.

4.சிறப்புக் கல்வித் துறை.

5. முதியோர் தற்சார்பு வாழ்க்கைத்துறை என பல்வேறு பிரிவுகளுடன் தமிழகத்தின் தேசிய நிறுவனமாக பரிணமித்து சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறு மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான பள்ளிகளும், அவர்களை முறையாக பராமரிப்பதற்கான சிகிச்சைகளும், கூடுதலாக அவர்களை முறைப்படி வழிநடத்த தேவையான சிறப்பு நிபுணர்களையும் உருவாக்குகின்ற பல்வேறு பிரிவுகளைக் கொண்ட கல்லூரியும் இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தில் 24 நிரந்தர பணியாளர்களும் மற்றும் 150-க்கும் மேற்பட்ட ஒப்பந்த பணியாளர்களும் தொடக்கத்தில் இருந்து இந்நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக தங்களை அர்ப்பணித்து பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக தினசரி செயல்பாடு, பராமரிப்பு, மறுவாழ்வு சேவைகள், சிறப்புக் கல்வி, நிர்வாகம், விடுதி பராமரிப்பு, சிகிச்சை சேவைகள் மற்றும் வெளிநடவடிக்கை என பல திட்டங்களுக்கு கணிசமாக பங்களிக்கின்றனர்.

பெரும்பாலும் தங்களுடைய வாழ்நாளின் நேரத்தை இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வந்த ஒப்பந்த ஊழியர்களுக்கு, சொற்ப ஊதியம் கொடுக்கப்பட்டு வந்த நிலையில், பல்வேறு பேச்சு வார்த்தைக்கு பின், செப்டம்பர் 2024 ஆண்டு அமைச்சகத்தின் ஒப்புதலோடு, திருத்தி அமைக்கப்பட்ட ஊதியத்தை வழங்குவதாக அதிகாரப்பூர்வமாக தெரிவித்தது. அதன் அடிப்படையில் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடத்தியதில் தேர்ச்சி பெற்றதோடு, அனுபவ தகுதியின் அடிப்படையில் தொடர்ந்து ஒப்பந்த ஊழியராக அனுமதிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் ஒப்பந்த ஊழியர்களாக பணியாற்றி வருபவர்கள் 2024-2027 ஆண்டுக்கான ஒப்பந்தம் முடிவதற்கு முன்னரே இந்த நிர்வாகம் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, ஊழியர்களை வேலையை விட்டு நிறுத்துவதாக தெரிவித்திருக்கிறது.

குறிப்பாக ஏப்ரல் 2026 ஆண்டு புதிதாக கூடுதல் பொறுப்பாக பதவியேற்றுள்ள இயக்குனர் (NIEPMD) டாக்டர் பி. வி.ராம்குமார் அவர்களின் நியமனத்திற்குப் பிறகு, NIEPMD- இல் கிராண்ட்- இன்-எய்ட் (GIA) நிதிநிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் தேவையான அளவு நிதி இல்லை என மேற்கோள் காட்டி உடனடியாக பெரிய அளவிலான 100-க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்களை நீக்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. மேலும் தமிழர்களாகிய இந்த நிறுவன ஊழியர்கள் மீது கடுமையான இந்தி திணிப்பு நடப்பதாகவும் புகார் எழுந்துள்ளது.

இது ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடையே அச்சத்தையும், நிலையற்ற தன்மையையும், மன அழுத்தத்தையும் உருவாக்கியுள்ளது. வயது மூப்பின் காரணமாக புதிதாக பணி கிடைப்பது என்பது எளிதானதல்ல என்பதால், அவர்களுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும் கேள்விக்குறியாகி உள்ளது.

இதனால் இங்கு வந்து சிகிச்சை பெறுகின்ற பெரும்பான்மை ஏழை எளிய மற்றும் நடுத்தர குடும்ப பெற்றோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். சொல்லப்போனால் மேல் குறிப்பிட்ட செயல்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு ஒரு சாதாரண சிகிச்சை மையமாகவே இதை செயல்படுத்துவதற்கு தான் இந்த அதிகாரிகளும் ஒன்றிய அரசும் திட்டமிடுகிறதோ என்ற எண்ணம் எழுகிறது.

எனவே சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை அமைச்சர் தலையிட்டு ஊழியர்களின் வேலை வாய்ப்பை நிரந்தர தன்மையுடையதாக மாற்றி வாழ்வாதாரத்தையும்; இந்நிறுவனம் எவ்வித இடையூறுமின்றி திறம்பட செயல்படவும்; மாற்றுத்திறனாளி குழந்தைகளை பாதுகாத்திடவும், மாற்றுத்திறனாளிகளின் அணி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# “அவருக்குத் தெரியவில்லை”

அவருக்குத் தெரியவில்லை
அரசு நாற்காலிக்கு
நான்கு கால்கள்
கடமை கண்ணியம்
கட்டுப்பாடு கனிவு

அவருக்குத் தெரியவில்லை
அந்த
நாற்காலியின் குணம்
தங்கத்தட்டில் வைத்த
சோறாக
இருக்க வேண்டும்
தகரத் தட்டில் வைத்த
நரகலாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
அந்த நாற்காலியின் தரம்
மலரை மொய்க்கும்
வண்டாக
இருக்க வேண்டும்
மலத்தை மொய்க்கும்
ஈயாக அல்ல

அவருக்குத்
தெரியவில்லை
அந்த
நாற்காலியின்
குரல்
சந்தனக் குழைவாக
இருக்க வேண்டும்
சாக்கடைக் கழிவாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
அந்த
நாற்காலியின் கம்பீரம்
கொள்கையின் உயரமாக இருக்க
வேண்டும்
கடலைக்கால் உயரமாக அல்ல
அவருக்குத் தெரியவில்லை
அந்த
நாற்காலியின் துணிவு
பருந்துப் பாய்ச்சலாக
இருக்க வேண்டும்
ஊர்க்குருவி கூச்சலாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
கோட் சூட் போடுவது
முக்கியமல்ல
தமிழர்கள் கோவணாண்டி
ஆகக் கூடாது
என்பதே முக்கியம்

தனிவிமானத்தில்
சிகை அலங்கார நிபுணரோடு
செல்வது முக்கியமல்ல
ஒன்றியம்
தமிழ்நாட்டை மொட்டையடிக்கக்
கூடாது
என்பதே முக்கியம்

நரம்பு புடைக்க
வசனம் பேசுவது
முக்கியமல்ல
சமூகநீதி சமநீதி
மெலியக் கூடாது என்பதே முக்கியம்

என்ன சொல்லி
என்ன பிரயோஜனம்?

அவருக்குத் தெரியவில்லை
எதுவுமே



ஆண்டாள் பிரியதர்ஷினி
திமுக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வட்ட கழக செயலாளர், 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமையில் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து கழக கொடி ஏற்றி பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் 1000 நபர்களுக்கு காலை சிற்றுண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் வழங்கினார். நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன், ஏ.டி.மணி, க.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், இ.மணிமேகலை எம்.சி, எம்.விமலா, எஸ்.கிருஷ்ணன், ஏ.முருகேசன, மற்றும் வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.